## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

## அசல் வழக்கு எண். 20/2023

இன்று 2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : பாபு

தந்தை பெயர் : ஜெயானந்தன்

வயது : 49

முதல் விசாரணை

2ம் வாதி ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் 2ம் வாதி.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

2ம் வாதியின் ஆதார் அட்டை ஒளிநகல் **வா.சா.ஆ.1** (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

2ம் வாதியின் ஸ்மார்ட் அட்டை ஒளிநகல் **வா.சா.ஆ.2** (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

24.01.2023 – 01.01.2015 முதல் 23.01.2023 முதல் வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் **வா.சா.ஆ.3** ஆகும்.

11.10.2018 – 1ம் வாதி டி.டி.சி.பி. க்கு அனுப்பிய மனுவின் கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

14.11.2022 – 1ம் வாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது **வா.சா.ஆ.5** ஆகும்

14.11.2022 – 1ம் வாதி பெயரிலுள்ள தண்ணீர் வரி ரசீது **வா.சா.ஆ.6** ஆகும்

மின் கட்டண ரசீது **வா.சா.ஆ.7** ஆகும்.

17.11.2022– திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து 2ம் வாதிக்கு வந்த அழைப்பாணை அசல் **வா.சா.ஆ.8** ஆகும்.

18.8.2021 – பொங்குபாளையம் கிராமம் பட்டா எண் 159க்குரிய சிட்டா கணினி நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

24.01.2023 – வாதி பிரதிவாதிகளுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுகளுடன் **வா.சா.ஆ.10** ஆகும்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.